<u>இராமநாதபுரம் நகராட்சி</u>

**இராமநாதபுரம் நகராட்சியில் 2022 ஏப்ரல் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 11.04.2022–ந் தேதி காலை 10.00 மணிக்கு நகர்மன்றத்தலைவர் இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:-**

<table>
<tr>
<td>பொருள் எண்..1</td>
<td>இராமநாதபுரம் நகராட்சிக்கு அனைத்து கட்டமைப்புகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்க சட்டமன்ற கூட்டத்தில் மானிய கோரிக்கை எண்.34ன்படி அறிவிப்பு வெளியிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் இந்நகர்மன்றம் வாயிலாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.</td>
<td>தீர்மானம் எண்.15<br>நன்றி தெரிவித்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..2</td>
<td>இராமநாதபுரம் நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021–2022ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்துள்ளதற்கும் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம் அவர்களுக்கு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணிகளின் பெயர்</th><th>மதிப்பீடு (தொகை ரூ.லட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>வார்டு எண்–6ல் மாரியம்மன் கோவில் தெருவில் நியாயவிலைக்கடை கட்டிடம் கட்டுதல்</td><td>9.50</td></tr>
<tr><td>2</td><td>வார்டு எண்–25ல் மூலக்கொத்தளம் தெருவில் நியாய விலைக்கடை கட்டிடம் கட்டுதல்</td><td>9.50</td></tr>
<tr><td>3</td><td>வார்டு எண்–30ல் கீரைக்காரத் தெருவில் நியாய விலைக்கடை கட்டிடம் கட்டுதல்</td><td>9.50</td></tr>
<tr><td>4</td><td>வார்டு எண்–15ல் பட்டரைக்காரத் தெருவில் நியாய விலைக்கடை கட்டிடம் கட்டுதல்</td><td>9.50</td></tr>
<tr><td>5</td><td>TNSTC பணிமனை அருகாமையில் பயணிகள்</td><td>9.50</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண்.16<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>நிழற்குடை அமைத்தல்</td><td></td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>ரூ.47.50 லட்சம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u> –1)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>
2)மேற்படி திட்டப்பணிக்கான மதிப்பீடுகள் தயார் செய்துள்ளதை கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம் அவர்களுக்கு சமர்ப்பிக்கவும் மேல்நடவடிக்கை தொடரவும் மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டு அதற்கான செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..3</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி குடிநீர் விநியோகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், இராமநாதபுரம் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் வழங்கப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. தற்பொது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வழங்கப்படும் குடிநீர் அளவு மிகவும் குறைந்து விட்டது. இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் பயன்பாட்டிற்கு வந்த நிலையில், நகராட்சி பராமரிப்பில் இருந்து உள்ளூர் நீர் ஆதாரங்களான, லெட்சுமிபுரம் ஊரணியில் குடிநீர் விநியோகம் வழங்கியது நிறுத்தப்பட்டு விட்டது. தற்பொழுது மேற்கண்ட ஊரணியில் நீர் ஆதாரம் இருக்கும் நிலையில், அவ்ஊரணியில் உள்ள நீர் உறிஞ்சு கிணற்றினை புணரமைப்பு செய்து அந்தந்த வார்டுகளுக்கு குடிநீர் விநியோக பகிர்மான குழாய் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br>
எனவே மேற்கண்ட ஊரணியில் உள்ள நீர் உறிஞ்சு கிணற்றினை தூர்வாரியும், புதிய மின் மோட்டார்கள் பொருத்தி, அப்பகுதியில் குடிநீர் விநியோக பகிர்மான குழாய் பதிக்க தயார் செய்த உத்தேச மதிப்பீடு ரூபாய்.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>–1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2)மேலும் இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளவும், வறட்சி நிவராண திட்டத்தில் இருந்து மானியம் பெறப்பட்டால் அதனை ஈடு செய்து கொள்ளவும் மேலும் மேற்படிக்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பர செலவினத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td><u>தீர்மானம் எண்.17</u><br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..4</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி குடிநீர் விநியோகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், இராமநாதபுரம் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் வழங்கப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. தற்பொது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வழங்கப்படும் குடிநீர் அளவு மிகவும் குறைந்து விட்டது. இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் பயன்பாட்டிற்கு வந்த நிலையில், நகராட்சி பராமரிப்பில் இருந்து உள்ளூர் நீர் ஆதாரங்களான, முகவை ஊரணியில் குடிநீர் விநியேகாம் வழங்கியது நிறுத்தப்பட்டு விட்டது. தற்பொழுது மேற்கண்ட ஊரணியில் நீர் ஆதாரம் இருக்கும் நிலையில், அவ்ஊரணியில் உள்ள நீர் உறிஞ்சு கிணற்றினை புணரமைப்பு செய்து அந்தந்த வார்டுகளுக்கு குடிநீர் விநியோக பகிர்மான குழாய் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.</td>
<td><u>தீர்மானம் எண்.18</u><br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | எனவே மேற்கண்ட ஊரணியில் உள்ள நீர் உறிஞ்சு கிணற்றினை துார்வாரியும், புதிய மின் மோட்டார்கள் பொருத்தி, அப்பகுதியில் குடிநீர் விநியோக பகிர்மான குழாய் பதிக்க தயார் செய்த உத்தேச மதிப்பீடு ரூபாய்.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு–1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)**மேலும் இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளவும், வறட்சி நிவராண திட்டத்தில் இருந்து மானியம் பெறப்பட்டால் அதனை ஈடு செய்து கொள்ளவும் மேலும் மேற்படிக்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பர செலவினத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| பொருள் எண்..5 | இராமநாதபுரம் நகராட்சி குடிநீர் விநியோகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், இராமநாதபுரம் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் வழங்கப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. தற்பொது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வழங்கப்படும் குடிநீர் அளவு மிகவும் குறைந்து விட்டது. இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் பயன்பாட்டிற்கு வந்த நிலையில், நகராட்சி பராமரிப்பில் இருந்து உள்ளூர் நீர் ஆதாரங்களான, நொச்சிவயல் ஊரணியில் குடிநீர் விநியோகம் வழங்கியது நிறுத்தப்பட்டு விட்டது. தற்பொழுது மேற்கண்ட ஊரணியில் நீர் ஆதாரம் இருக்கும் நிலையில், அவ்ஊரணியில் உள்ள நீர் உறிஞ்சு கிணற்றினை புணரமைப்பு செய்து அந்தந்த வார்டுகளுக்கு குடிநீர் விநியோக பகிர்மான குழாய் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br>எனவே மேற்கண்ட ஊரணியில் உள்ள நீர் உறிஞ்சு கிணற்றினை துார்வாரியும், புதிய மின் மோட்டார்கள் பொருத்தி, அப்பகுதியில் குடிநீர் விநியோக பகிர்மான குழாய் பதிக்க தயார் செய்த உத்தேச மதிப்பீடு ரூபாய்.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு–1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)**மேலும் இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளவும், வறட்சி நிவராண திட்டத்தில் இருந்து மானியம் பெறப்பட்டால் அதனை ஈடு செய்து கொள்ளவும் மேலும் மேற்படிக்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பர செலவினத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம். | **தீர்மானம் எண்.19**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..6 | இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM)-ன் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, அவர்களது செயல்முறை உத்திரவு ந.க.எண்.20739/2021/UPA-1, நாள்.24.03.2022-ன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகர்ப்புற தெரு ஓர வியாபாரிகளுக்கு ஆதரவு Support to Urban Street Vendors(SUSV) திட்டத்தின் கீழ் நகராட்சியால் தேர்வு செய்யப்பட்ட தெருகடை வியாபாரிகளுக்கு கீழ்க்கண்டவாறு இராமநாதபுரம் நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு ரூ.68,26,000/- செய்யப்பட்டுள்ளது.<br>1)பழங்கள், காய்கறிகள், வியாபாரம் செய்வதற்கு -55 எண்ணிக்கை ரூ.53,90,000/- | **தீர்மானம் எண்.20**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

| | | |
|---|---|---|
| | 2)சிற்றுண்டி வியாபாரம் செய்ய - 12 எண்ணிக்கை ரூ.11,75,000/-<br>3)பூ வியாபாரம் செய்ய - 13 எண்ணிக்கை ரூ.2,60,000/-<br>மொத்தம் -80 எண்ணிக்கை ரூ.68,26,000/-<br>மேற்படி திட்டத்தின் கீழ் 80 எண்ணிக்கை கொண்ட வண்டிகளுக்கு (Cart) வாங்குவதற்கு உத்தேச மதிப்பீட்டு தொகை தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் நடவடிக்கைத் தொடரவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி வரைமுறையின்படி வாகனம் வாங்கி அதற்கான செலவினத்தை சம்பந்தப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோர விளம்பர செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** –மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4035/2014/H1 | |
| பொருள் எண்..7 | இராமநாதபுரம் நகராட்சி கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்திலிருந்து இந்நகராட்சி செலுத்த வேண்டிய 2021-2022ம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய ஆண்டுச் சந்தா தொகை ரூ.2,00,000/-ம் செலுத்தக் கோரி கேட்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** –1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண்.3285/2022/அ3 | **தீர்மானம் எண்.21**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..8 | தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.<br>**15–**ஆவது மத்திய நிதி ஆணையம், **2022–2023–**ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e. Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் **2.0** மற்றும் அம்ரூட் **2.0** ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.<br>அரசாணை(நிலை) எண்.**73** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**19.07.2018** மற்றும் அரசாணை(நிலை) எண்.**76** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**26.07.2018** ஆகியவற்றில் சொத்துவரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை) எண்.**150** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, | **தீர்மானம் எண்.22**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

நாள்.19.11.2019–ன்படி, சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்துவரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது, பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொதுமக்களுக்கு வழங்கப்படவேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்துவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சி பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை(நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்க்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building)**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |

| | |
|---|---|
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non-Residential Building)**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | **1.75** |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | **2** |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | **1.75** |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.**

1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
2. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
5. வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
6. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்துவரி விதிப்பு செய்யும்போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி விதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்தி சொத்துவரி சீராய்வு</u>**

ஏற்கெனவே உள்ள சொத்துவரி/ காலிமனை வரியில் ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி/ காலிமனைவரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும் மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும், இராமநாதபுரம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்க்கண்டவாறு கடன் தொகை/ நிதித்தேவை உள்ளது.

| **வ. எண்.** | **செலவின வகைப்பாடு** | **தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி(Current Liabilities) (ரூ.கோடியில்)** |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 426.24 லட்சம் |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் (TWAD) | 2803999/– |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | Loan Details for the Year 2021-2022 (see below) |

Loan Details for the Year 2021-2022

| Sl.No | TNUDP Loan | Loan amount | Loan | Interest | Total |
|---|---|---|---|---|---|
| | | (In lakhs) | | | |
| 1 | WSPF 74004 UGSS | 97.00 | 51.73 | 19.78 | 71.51 |
| 2 | WSPF 725003 UGSS | 1268.79 | 909.29 | 887.22 | 1796.51 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | LLD<br>0001610<br>UGSS | 150.00 | 27.19 | 1.76 | 28.95 |
| | | 4 | LLD<br>0001590<br>UGSS | 300.00 | - | - | - |
| | | TUFIDCO CWSS | | **1287.90** | **1064.00** | **–** | **1064.00** |
| | | | | | | | **2960.77** |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | **<u>ஓய்வுக்கால பணப்பயன்</u>**<br>**1)**பொது பிரிவு – **6,00,000**/-<br>2)பொது சுகாதாரம் **– 14,00,000/–**<br>**3)**சேமநலநிதி **–94,15,274/–**<br>**4)**பங்களிப்பு ஓய்வூதியம் **–3013356/–**<br>**5)**LIC**–154497/–** | | | | | |
| | **மொத்தம்** | **3105.05** | | | | | |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், **1920**, பிரிவு **81–** A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.**40032/2012/**ஆர்**1**, நாள்.**01.04.2022** ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், இராமநாதபுரம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/ காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5. வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
7. காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போது உள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8. ஏற்கெனவே உள்ள சொத்து வரி/ காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில்(GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்து வரி/ காலிமனைவரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மண்டலங்கள் வாரியாக சொத்துவரி சீராய்வு செய்ய வெளியிடப்பட்ட அரசு ஆணை எண்.52 நாள்.30.03.2022 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் அவ்வரசாணையின்படி கீழ்க்கண்டவாறு வரி சீராய்வு செய்திடவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| குடியிருப்பு | | | | | |
|---|---|---|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | கட்டிடத்தின் சதுர.அடி | | | |
| | | <=600 | 601-1200 | 1201-1800 | >=1801 |
| | | 1.25 | 1.5 | 1.75 | 2 |
| A | 0.90 | 1.13 | 1.35 | 1.58 | 1.80 |
| B | 0.70 | 0.90 | 1.05 | 1.23 | 1.40 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| C | 0.50 | 0.60 | 0.75 | **0.90** | 1.00 |
| D | | | | | |

| வணிகம் | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு(*2) |
| A | 2.70 | 5.40 |
| B | 2.10 | 4.20 |
| C | 1.50 | 3.00 |
| D | | |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | | |
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*1.75) |
| A | 1.35 | 2.36 |
| B | 1.05 | 1.84 |
| C | 0.75 | 1.31 |
| D | - | |
| தொழிற்சாலை | | |
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது தொழிற்சாலை பயன்பாடு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*1.75) |
| A | 2.70 | 4.72 |
| B | 2.10 | 3.68 |

| | | |
|---|---|---|
| C | 1.50 | **2.63** |
| D | | |

| **காலிமனை வரி** | | |
|---|---|---|
| **மண்டலம்** | **பழைய மண்டல மதிப்பு** | **வரிசீராய்வின் போது காலிமனை இடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*2)** |
| A-குடியிருப்பு பகுதிகள் அமைந்துள்ள தெருக்கள் பகுதி | 0.30 | 0.60 |
| B-முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைக்கு இட்டு செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் அல்லாதவை | 0.40 | 0.80 |
| C- முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைக்கு இட்டு செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் | 0.50 | 1.00 |

**அலுவலகக்குறிப்பு :1)அரசாணை (நிலை) எண்.52,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி4)**

**படித்து பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**

சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை(நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சுற்றறிக்கை ந.க.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இராமநாதபுரம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் 3105.05 கோடி கடன்தொகை / நிதித் தேவையாக உள்ளது. மேலும், விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு

| | | |
|---|---|---|
| | செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறு, பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வழங்கப்படுகிறது.<br><br>ந.க.எண்.(732/2022/அ1) | |
| பொருள் எண்..9 | இராமநாதபுரம் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களது சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி புதிய ஈப்பு வாகனம் சிறப்பு நிலை நகராட்சிக்கு 5 எண்ணிக்கை வாங்குவதற்கும் உரிய நிபந்தனைகளுடன் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி நிதிநிலைமையை கருத்தில்கொண்டு 1 எண்ணிக்கை வாகனம் (INNOVA) வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.30.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் மேற்படி வாகனம் வாங்குவதற்கான விதிமுறைகளின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் உரிய வழிமுறைகளின்படி நிர்வாக அனுமதி பெற்று வாகனம் வாங்க ஆணையரால் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் அதற்குரிய தொகையை பொது நிதியிலிருந்து செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** –மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மானம் எண்.23**<br><br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..10 | இராமநாதபுரம் நகராட்சி 15-வது நிதிக்குழு மான்யம் விடுவிக்க திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளின்படி தூய்மை இந்தியா திட்டத்தின் இரண்டாம் பகுதியான SBM 2.0-ன் கீழ் குப்பைகழிவுகள் தேக்கமற்ற நகராட்சிக்கான 3 நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெற முன் ஏதுவாக இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1692 நாள்.24.01.2022-ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படிடையில் பொதுமக்களிடம் ஆட்சேபனை கோரி தினசரி நாளிதழில் 01.03.2022 அறிவிப்பு வெளியிடப்பட்டதில் எவரிடமிருந்தும் ஆட்சேபணை பெறப்படவில்லையாதலால் குப்பை கழிவுகள் தேக்கமற்ற நகராட்சிக்கான 3 நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெற அடுத்தப்படியான ஆவணங்களை சமர்ப்பித்திடவும் தொடர் கண்காணிப்புடன் 3 நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மானம் எண்.24**<br><br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..11 | இராமநாதபுரம் நகராட்சி 15-வது நிதிக்குழு மான்யம் விடுவிக்க தூய்மை இந்தியா திட்டத்தின் இரண்டாம் | **தீர்மானம் எண்.25** |

| | | |
|---|---|---|
| | பகுதியான SBM 2.0-ன் கீழ் ODF++ சான்று பெற தூய்மை இந்தியா திட்ட வழிகாட்டுதல்களின்படி பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனைகோர இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1691 நாள்.24.01.2022-ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. பொதுமக்களிடம் ஆட்சேபனைகோரி தினசரி நாளிதழில் 01.03.2022 அறிவிப்பு வெளியிடப்பட்டதில் எவரிடமிருந்தும் ஆட்சேபனை பெறப்படவில்லையாதலால் ODF++ சான்று பெற ஆவணங்களை சமர்ப்பித்திடவும் தொடர் கண்காணிப்புடன் ODF++ சான்று பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம் | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..12 | இராமநாதபுரம் நகராட்சியில் உள்ள கணினி பிரிவில் இயங்கி வரும் Ricoh Gestetner MP2001L ஜெராக்ஸ் மெஷினை அவசர அவசியம் கருதி பழுது நீக்கம் செய்ய வேண்டி உள்ளதால், உத்தேசன செலவினம் ரூ.20000/-க்கு இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்கான Ricoh Gestetner அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரான M/S.Karunambigai Info Systems and Services, சிவகங்கை அவர்கள் மூலமாக பழுது நீக்கம் செய்ய பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**-1.மன்றம் அனுமதிக்கலாம்<br>2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2708/2021/இ1 | **தீர்மானம் எண்.26**<br><br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..13 | இராமநாதபுரம் நகராட்சி இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் 01.04.2022 முதல் துறை மூலம் வசூல் செய்வதற்கு தேவையான டோக்கன்கள் 1 முதல் 15000 வரை உள்ளூர் நிறுவனத்தில் விலைப்புள்ளி பெறுவதற்கும், அச்சடிக்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** -1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)நகராட்சியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.<br>3)உத்தேச செலவினம் ரூ.20000/- மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.27**<br><br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

| | | |
|---|---|---|
| பொருள் எண்..14 | இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-30ல் செல்லப்பெருமாள் கோவில் தெருவில் பொதுமக்கள் பயன்பாடின்றி உள்ள கழிப்பறையில் தனி நபரால் சமூக விரோத செயல்கள் நடைபெற வாய்ப்புள்ளது. எனவே அப்பகுதி மக்களின் நலன் கருதி மேற்படி பயன்பாடின்றி உள்ள கழிப்பறை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.28**<br><br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..15 | இராமநாதபுரம் நகராட்சி இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் வசூல் உரிமத்திற்கு திரு.சந்திரன் குத்தகைதாரர் பேரிடர் காலத்திற்கான குத்தகை தொகையை தவிர்த்து பயணிகள் யாரும் வாகனத்தை நிறுத்தம் செய்யாததால் இழப்பு ஏற்பட்டுள்ளதை கவனத்தில் கொண்டு தனக்கு 24.04.2021ந் தேதி முதல் 05.07.2021 வரை தான் செலுத்திய தொகைக்கு குத்தகை தொகை செலுத்தாமல் கால கட்டத்தை நீட்டித்து தருமாறு விண்ணபித்துள்ளார். மேற்படி தள்ளுபடி தொடர்பாக இராமநாதபுரம் நகராட்சி நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது என குத்தகைதாரருக்கு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து அவருக்குரிய குத்தகை காலத்தை உரிய ஏலத்தொகையில் 5% உயர்த்தி செலுத்த ஏலதாரர் முன்வராத காரணத்தாலும் புதிய பேருந்து நிலையம் இவ்விடத்தையும் உள்ளடக்கி பிரேரணை அனுப்பப்பட்டுள்ளதால் ஏலதாரரும் முன்வராமல் இருப்பாரேயானால் துறை மூலமாக மேற்படி பேருந்து நிலைய பணி துவங்கும் வரை துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**-1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைக்கு மன்றத்தின் அங்கீகாரம் வழங்கலாம். | **தீர்மானம் எண்.29**<br><br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..16 | இராமநாதபுரம் நகராட்சியின் 2019-2020ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணமாக ரூ.100060/-ஐ உரிய அரசுத் தலைப்பில் செலுத்திடுமாறு 2019-2020-ம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதி அறிக்கை பத்தி எண்.67-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தணிக்கைப் பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு தொகை ரூ.100060/-ஐ உரிய அரசு தலைப்பில் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**-1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.528/2017/அ4) | **தீர்மானம் எண்.30**<br><br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

| | | |
|---|---|---|
| பொருள் எண்..17 | இராமநாதபுரம் நகராட்சியில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் TN65 AF -4353ல் அடிக்கடி பழுதடைந்து இயக்க முடியாமல் உள்ளது. இதனால் வாகனத்தை சீராக இயக்க இயலவில்லை. எனவே மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்யும் ஆயில் சர்வீஸ் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.23000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் அத்தியாவசிய தேவையை கருதி மேற்படி வாகனத்தை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான PPS மோட்டார்ஸ், காரைக்குடி நிறுவனத்தினர் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**-1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1091/2022/இ1 | **தீர்மானம் எண்.31**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..18 | நகர்ப்புற பகுதிகளில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்ய ஏதுவாக சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் மூலம் நகராட்சி அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு அமைக்க அரசாணை (நிலை) எண்.31 சமூக நலம் மற்றும் சத்துணவு (ச.ந.5(1)) திட்டத்துறை, நாள்.22.09.2020ன் படியான அரசாணை வெளியிடப்பட்டு குழு அமைக்க இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும் மேற்படி குழந்தைகள் பாதுகாப்பு குழு தலைவராக நகர்மன்ற தலைவரையும், நகர்மன்ற தலைவர் பரிந்துரையின்படி 3 நகர்மன்ற உறுப்பினர்களையும் பாதுகாப்பு குழு உறுப்பினர்களாக தேர்வு செய்து அனுப்புமாறு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் இராமநாதபுரம் அவர்களது ந.க.எண்.52/மா.கு.பா.அ/2020 நாள்.28.03.2021ன் படியான கடிதம் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. நகர்மன்றத் தலைவர் தலைமையின் கீழ் 3 மன்ற உறுப்பினர்களை குழந்தைகள் பாதுகாப்பு குழுவில் சேர்க்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**- 1) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>2)நகர்மன்ற தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட கீழ்க்காணும் வார்டு உறுப்பினர்கள்<br>1)திருமதி.M.கனகவள்ளி- வார்டு 22 | **தீர்மானம் எண்.32**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

| | | |
|---|---|---|
| | 2)திருமதி.N.ஜோதிபுஷ்பம் - வார்டு 17<br>3)திருமதி.S.செல்வி - வார்டு 25<br>அவர்களை குழந்தைகள் பாதுகாப்பு நல குழுவில் இடம் பெற அனுமதிக்கப்பட்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | |
| பொருள் எண்..19 | இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-5ல் அலங்காச்சேரி தெருவில் ஏற்கனவே சிறுநீர் கழிப்பறை கட்டிடம் அமைக்கப்பட்டு பராமரிப்பின்றி பயன்பாடின்றி உள்ளது. இதனால் அப்பகுதிக்கு வரும் பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி தெருவில் உள்ள சிறுநீர் கழிப்பறையை பயன்பாட்டிற்கு கொண்டுவரும் பொருட்டு தண்ணீர் வசதி, (ஆழ்துளை கிணறு அமைத்தல்) விளக்கு வசதி மற்றும்இதர மராமரத்துப்பணி மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.1.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** –மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.33**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..20 | இராமநாதபுரம் நகராட்சி தற்பொழுது வறட்சி காலம் ஆரம்பித்து விட்டபடியால் குடிநீர் விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்படுகின்றது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வழங்கப்படும் குடிநீரும் குறைந்துவிட்டபடியால், நகர்பகுதியில் குடிநீர் பற்றாக்குறையை ஈடு செய்ய மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி கோடை காலத்தில் குடிநீர் தேவையை சரிசெய்யும் பொருட்டு வார்டு எண்-1 முதல் 16 வரை தனியார் குடிநீர் விநியோக லாரிகளை வாடகைக்கு அமர்த்தி தெருக்களுக்கு விநியோகம் செய்ய தயார் செய்த உத்தேச மதிப்பீடு ரூபாய்.4,65,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** –1)குடிநீர் விநியோகம் அவசர அவசியம் முன்னிட்டு மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேலும் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்படும் பட்சத்தில் இச்செலவினத்தை, அம்மானியத்தில் இருந்து ஈடு செய்யவும் மன்றம் அங்கீகரிக்கலாம். | **தீர்மானம் எண்.34**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..21 | இராமநாதபுரம் நகராட்சி தற்பொழுது வறட்சி காலம் ஆரம்பித்து விட்டபடியால் குடிநீர் விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்படுகின்றது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வழங்கப்படும் குடிநீரும் குறைந்துவிட்டபடியால், நகர்பகுதியில் குடிநீர் பற்றாக்குறையை ஈடு செய்ய மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி கோடை காலத்தில் குடிநீர் தேவையை சரிசெய்யும் பொருட்டு வார்டு எண்-17 முதல் 33 வரை தனியார் குடிநீர் விநியோக லாரிகளை வாடகைக்கு அமர்த்தி தெருக்களுக்கு விநியோகம் செய்ய தயார் செய்த | **தீர்மானம் எண்.35**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

| | | |
|---|---|---|
| | உத்தேச மதிப்பீடு ரூபாய்.4,95,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** –1)குடிநீர் விநியோகம் அவசர அவசியம் முன்னிட்டு மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேலும் இச்செலவினத்தை வறட்சி நிவாரணத் திட்டத்தில் இருந்து பெறப்படும் மானியத்தில் ஈடு செய்யும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| பொருள் எண்..22 | இராமநாதபுரம் நகராட்சியில் உள்ள கணிணி வரி வசூல் மையத்திற்கு BSNL Leased Line Connectivity BSNL நிறுவனத்தின் மூலம் இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது. மேற்படி இணைப்புக்கான கட்டணம் 01.07.2021 முதல் 31.12.2021 வரை உள்ள காலத்திற்கு கட்டணம் ரூ.119636/-யை BSNL நிறுவனத்திற்கு செலுத்துமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.29280/2020/IT, நாள்.31.03.2022ல் தெரிவிக்கப்பட்ள்ளது. அதன்படி மேற்கண்டவாறு BSNL நிறுவனத்திற்கு Band Line Connectivity-க்கான தொகை ரூ.119636/-யை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு** –மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.36**<br><br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..23 | இந்நகராட்சியில் பொறியியல் பிரிவு மற்றும் சுகாதார பிரிவில் நடைபெறும் பணிகளுக்கு JCB வாகனம் TN65 K 4682ல் பயன்பாட்டு வருகிறது. மேற்படி வாகனத்தில் இன்ஜின் பழுது, ரேடியேட்டர், ஹைட்ரானிக் டேங்க், Axies, front & back top plate மற்றும் இதர பழுது பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் வாகனத்தை இயக்க இயலவில்லை. இதனால் சுகாதார பிரிவு பணிகளில் தொய்வு ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை சீர்செய்ய உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** –மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1142/2022/இ1) | **தீர்மானம் எண்.37**<br><br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..24 | இராமநாதபுரம் நகராட்சி அலுவலக வளாகத்தில் ஏற்கனவே இருந்த நகர்மன்ற தலைவர் அறை மிகவும் தாழ்வாகவும், பொலிவிழந்தும் உள்ளதால் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை நகர்மன்ற தலைவர் அறையாக மாற்றம் செய்யவும் அவற்றில் கழிப்படைற வசதி, தண்ணீர் வசதி, மின்விளக்குகள், குளிர்சாதன வசதி, மேஜை மற்றும் நாற்காலிகள் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.6,80,000/-க்கு(ஆறு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** –மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.38**<br><br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..25 | இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார கேடு ஏற்படுத்தும் வகையில் தெருவில் பராரியாக சுற்றித் திரியும் பன்றிகளை தங்களது சொந்த செலவில் பிடித்து அப்புறப்படுத்தி தருவதற்கு அனுமதி கோரியுள்ள, ஆல் இந்தியா பன்றிகள் மற்றும் நாய்கள் பிடிப்போர், திருமங்கலம், மதுரை நிறுவனத்தின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு | **தீர்மானம் எண்.39**<br><br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

<table>
<tr>
<td></td>
<td>வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>2. நகரின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு, ஆல் இந்தியா பன்றிகள் மற்றும் நாய்கள் பிடிப்போர், திருமங்கலம், மதுரை நிறுவனத்தின் சொந்த செலவில் பிடித்து அப்புறப்படுத்தி தருவதற்கு உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். பட்டியல் அளிக்கப்பட்டால் அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..26</td>
<td>இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் 2022–23ஆம் ஆண்டிற்குரிய தினசரி பொது சுகாதார பணிகள் மேற்கொள்வதற்கும், பொது கழிப்பிடம், சுமுதாய கழிப்பிடம், பேருந்து நிலையம் மற்றும் பொது இடங்களில் சுகாதார பணிகள் மேற்கொள்வதற்கும், முக்கிய கோவில் திருவிழா மற்றும் பொது இடங்களில் சுகாதார பணிகள் மேற்கொள்வதற்கும் மழைக்காலங்களில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கும், தேவைப்படும் கிருமிநாசினிகள் மற்றும் சுகாதார தளவாட பொருட்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண். 10608/2021/ஹெச்2, நாள். 10.11.2021–ல் தெரிவிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தின் படி, கீழ்கண்ட கிருமி நாசினிகள் மற்றும் சுகாதார தளவாடப் பொருட்கள் கீழ்கண்ட அளவுகளில் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.9.5 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பொருட்கள் விபரம்</th><th>எண்ணம்</th></tr>
<tr><td>1</td><td>பிளீச்சிங் பவுடர்</td><td>10000-kg</td></tr>
<tr><td>2</td><td>நீர்த்த சுண்ணாம்புத் தூள்</td><td>20000-kg</td></tr>
<tr><td>3</td><td>லெமன் கிராஸ் ஆயில்</td><td>100-Lr</td></tr>
<tr><td>4</td><td>கையுறை</td><td>200-Sets</td></tr>
<tr><td>5</td><td>தென்னங்குச்சி கூட்டுமாறு</td><td>200- Nos</td></tr>
<tr><td>6</td><td>பெரிய கூட்டுமாறு (Milar)</td><td>100- Nos</td></tr>
<tr><td>7</td><td>முள் கரண்டி</td><td>50- Nos</td></tr>
<tr><td>8</td><td>புல் வாரி</td><td>50- Nos</td></tr>
<tr><td>9</td><td>குப்பை அள்ளும் சட்டி</td><td>100- Nos</td></tr>
<tr><td>10</td><td>கருப்பு பினாயில்</td><td>200-Lr</td></tr>
<tr><td>11</td><td>ஒளிரும் சட்டைகள்</td><td>170-Nos</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண்.40<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | <table><tr><td>12</td><td>மண்வெட்டி</td><td>60-Nos</td></tr><tr><td>13</td><td>அரிவாள்</td><td>12-Nos</td></tr><tr><td>14</td><td>வாங்கு அரிவாள்</td><td>10-Nos</td></tr><tr><td>15</td><td>கையோடு</td><td>100-Nos</td></tr></table><br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ஒப்பந்தபுள்ளி கோரும் தினசரி நாளிதழ் விளம்பர செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், கொள்முதல் செலவினத்தை திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டண நிதியிலிருந்து (SUC) மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள் எண்..27 | இராமநாதபுரம் நகராட்சியில் கீழ்கண்டுள்ள விபரப்படியான பொது சுகாதார வாகனங்களுக்கு காப்பீடு முடிவடைவதால், உரிய தொகையினை "யுனைட்டெட் இந்தியா பிரைவேட் லிமிட்டெட்" இராமநாதபுரம் நிறுவனத்திற்கு செலுத்தி காப்பீட்டினை புதுப்பித்துக் கொள்ள அனுமதி கோரி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>1. TN 65 AJ 6514 – ரூ. 19,200/–<br>2.TN 65 AJ 6572 – ரூ. 19,200/–<br>3.TN 65 AJ 6570 – ரூ. 19,200/–<br>4.TN 65 AJ 6580 – ரூ. 19,200/–<br>மொத்தம் – ரூ. 76,800/–<br>**அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அங்கீகரிக்கலாம்.**<br>**2. பொது சுகாதார நலன் கருதி காப்பீட்டு தொகையினை செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.** | **தீர்மானம் எண்.41**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..28 | இராமநாதபுரம் நகராட்சி தேவிப்பட்டிணம் ரோடு, கேணிக்கரை சந்திப்பில் 'Eradication OF Open Defecation" திட்டத்தின் கீழ் | **தீர்மானம் எண்.42**<br>**அலுவலக குறிப்பு** |

| | | |
|---|---|---|
| | கட்டப்பட்ட இலவச "Urinal " பழுதடைந்த நிலையில் உள்ளது. மேற்கண்ட இலவச Urinal ஐ பழுது நீக்கம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வருதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூபாய்.1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு–1)**பொது சுகாதாரம், அவசர அவசியம் முன்னிட்டு மன்றம் அனுமதிக்கலாம். | **அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..29 | இராமநாதபுரம் நகராட்சி வார்டு எண்–10ல் இராமேஸ்வரம் தேவஸ்தானம் ஆபிஸ் மேற்கு தெருவில் உள்ள கடந்த 10 ஆண்டுகளாக பயன்பாட்டில் இல்லாத பொது கழிப்பறை பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது. எனவே அதனை இடித்து அப்புறப்படுத்தவும், அவ்விடத்தில் பொது மக்களுக்கு பயன்பெறும் வகையில் வேறு திட்டங்களுக்கு உபயோகப்படுத்த ஆவணம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு–1)** மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.43**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |
| பொருள் எண்..30 | மத்திய அரசின் Lr.No.1/24/2019–CEN-TN நாள்.22.02.2022ன்படி 180 பிளாக் இருக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கணக்கெடுப்பாளர்களை நியமித்து அவர்களின் மூலம் (GIS Survey) பணி முடிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு–1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 479/2022/அ3) | **தீர்மானம் எண்.44**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

**(ஒப்பம்) கு.கார்மேகம்,**
**நகர்மன்றத்தலைவர்,**
**இராமநாதபுரம் நகராடசி.**